# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2446 - 2025 ජූලි මස 18 වැනි සිකුරාදා - 2025.07.18**

2446 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 642 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோரள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப்பெறுபேறுகளும் பிறவும்

மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவைப் பிரிவின் விவசாய போதனாசிரியர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2025

மத்திய மாகாண அரசாங்க சேவையில் விவசாய திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவைப் பிரிவின் விவசாய போதனாசிரியர் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மத்திய மாகாணத்தில் வசிக்கும் தகைமையுடைய ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிருபம் 10/2025 இன் MN3-2025 சம்பளத் தொகுதிற்கமைய இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 52,250 – 10X800 – 11X1190 – 10X1320 – 10X1350 – 100,040 ஆகும். அத்துடன் இச்சுற்று நிரூபத்தின் உப அட்டவணை III இற்கமைய நியமனம் செல்லுப்படியாகும் திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும்.

**03. சேவை நிபந்தனைகள் :-**

3.1 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

3.2 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைப் பெறும் அபேட்சகர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு, இச்சேவைக்கு நியமிக்கப்படுவர்.

3.3 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் விவசாய போதனாசிரியர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவிஉயர்வு திட்டத்திற்கமைய உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் அரசகரும மொழிக்கான தேர்வுப் பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும்.

3.4 இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் மத்திய மாகாணத்திலிருந்து வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வது தொடர்பில் மேற்கொள்ளும் எத்தகைய கோரிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்துடன், நியமிக்கப்படும் சேவை நிலையத்தில் கடமைப் பொறுப்பேற்கும் திகதியிலிருந்து குறைந்தபட்சம் 03 வருட காலம் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும்.

3.5 இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை, மத்திய மாகாண நிதி ஒழுங்கு விதிகள், மத்திய மாகாண தொழிநுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு, நடைமுறை விதி, மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் வெளியிடப்படும் விதிமுறைகள் அல்லது கட்டளைகள், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் பிற விதிமுறைகள் அல்லது கட்டளைகள், அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டு ஒழுகுதல் வேண்டும்.

**04. நிலவும் வெற்றிடங்கள் :**

4.1 மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் விவசாய போதனாசிரியர் தரம் III இல் பதவியில் நிலவும் 25 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள இருப்பதுடன், இப்பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குறியதாகும்.

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.07.31 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குறிய அனைத்து தகைமைகளையும் 2025.07.31 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**05. தகைமைகள்**

5.1 *கல்வித் தகைமைகள் :*

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் விவசாயம், உயிரியல், இரசாயனவியல், தாவரவியல், பௌதீகவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் 02 பாடங்கள் உட்பட விஞ்ஞானம் பிரிவின் கீழ் 03 பாடங்களில் (பொது வினாத்தாள்/ ஆங்கிலம் தவிர்ந்து) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், தொழில்நுட்பப் பிரிவிற்குறிய உயிர் முறைமைத் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய 02 பாடங்கள் உட்பட 03 பாடங்களில் (பொது வினாத்தாள்/ ஆங்கிலம் தவிர்ந்து) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

5.2 *தொழில்சார் தகைமைகள் : -*

I. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

அல்லது

II. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் விவசாய துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் ஆறு (N.V.Q.6) இற்கான தகுதிச் சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

அல்லது

III. அம்பாறை ஹாடி தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான தேசிய டிப்ளோமா சான்றிதழ்

அல்லது

IV. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட விவசாய சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் விவசாய தகைமைகளைப் பெற்றிருத்தல்

5.3 *அனுபவம் : ஏற்புடையதன்று*

5.4 *பௌதீக தகைமைகள் :*

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஏதுவான வகையில் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.5 *ஏனைய தகைமைகள் :*

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2025.07.31) உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரர் மத்திய மாகாணத்தில் 03 வருடங்களுக்குக் கூடிய நிரந்தர வதிவினைக் கொண்ட வாழ்க்கைத் துணையினைக் கொண்டிருப்பின் அது பற்றிக் கவனத்திற் கொள்ளப்படும்)

IV. ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமையற்றவராவார்.

V. விண்ணப்பதாரர் 2025.07.31 ஆம் திகதியன்று பதவியுடன் தொடர்புடைய அனைத்து தகைமைகள் மற்றும் வயதெல்லையினை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்கும் பட்சத்தில் மாத்திரம், சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமைகளைப் பெற்றுக்கொண்டார் என ஏற்றுக்கொள்ளப்படும்.

**06. வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று (2025.07.31) 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**07. பரீட்சைத் திட்டம்**

I. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
II. பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.
III. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.
IV. பரீட்சை நிலையம் – கண்டி நகரில் மாத்திரம் நடைபெறும்.
V. விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துகையில் அங்கவீனர்கள் (மாற்றுத்திறனாளிகள்) இருப்பின் தனது அங்கவீனத்தின் தன்மை மற்றும் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடல் வேண்டும். அங்கவீனம் அல்லாத ஒருவர் பொய்யான முறையில் அங்கவீனர் என குறிப்பிடலாகாது.

**08. ஆட்சேர்ப்பிக்கும் முறை**

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய எத்தனித்துள்ள எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

09. பரீட்சை தொடர்பான பாடவிதானம்

| *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| தொழில்நுட்பவியல் வினாத்தாள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

| *வினாத்தாள்* | *பாடவிதானம்* |
|---|---|
| உளச்சார்பு | இவ்வினாத்தாள் முறன்பாட்டுக்கான தீர்வு, தர்க்க ரீதியியாகச் சிந்திக்கும் ஆற்றல், நேர முகாமைத்துவம் போன்றவை தொடர்பான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். |
| தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம் | 1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு<br>2. இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு<br>3. மண் மற்றும் தாவரப் போசணைகள்<br>4. நெல் உற்பத்தி<br>5. ஏனைய களப் பயிர்கள் உற்பத்தி<br>6. காய்கறி உற்பத்தி<br>7. பழப்பயிர் உற்பத்தி<br>8. பயிர் பாதுகாப்பு<br>9. மண் இரசாயணம், மட்பாதுகாப்பின் முக்கியத்துவம், மட்பாதுகாப்பு முறைகள்<br>10.நீர்ப்பாசன முறைகள், நீர் முகாமைத்துவம்<br>11.பண்ணை இயந்திரமயமாக்கல்<br>12. தேனீ வளர்ப்பு<br>13. மலர் வளர்ப்பும் தரை அலங்காரப்படுத்தலும்<br>14. பாதுகாப்புப் பயிர் வளர்ப்பு<br>15. கால்நடை வளர்ப்பு<br>16. விவசாய விரிவாக்கல்<br>17. இழையவளர்ப்பு<br>18. பயிர் தொற்றுத் தடைக்காப்பு (Plant Quarantine) தொடர்பான அறிவு<br>19. (a) தாவரப் பேணுகையின் முக்கியத்துவம் (தாவரம்/ முதலுருப்பரம்பரையலகு)<br>(b)தாவரப் பேணுகை முறைகள் (தாவரம்/ முதலுருப்பரம்பரையலகு)<br>20. மரபணுத் தொழிநுட்பம்<br>21. விவசாய அபிவிருத்தி<br>22. நிகழ்கால விவசாய அபிவிருத்திக் கொள்கைகள், அதன் முக்கியத்துவம், |

**10. விண்ணப்பிக்கும் முறை:**

I. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ-4 (A4) அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 04 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 05 முதல் 07 வரையிலான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 08 முதல் 12 வரையிலான பந்திகள் மூன்றாம் பக்கத்திலும், ஏனையவை நான்காம் பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சார்த்தியினால் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணம் செலுத்தியிறாத, சரியாக பூர்த்தி செய்திறாத, முழுமையற்ற, மற்றும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பிலான இழப்பினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருப்பது உசிதமானது.

II. விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்துகொள்ளும்போது பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

III. அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணத்தினை மத்திய மாகாண சபைக்கு செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி அல்லது

அதற்கு முன்னதாக மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிற பற்றுச்சீட்டை விண்ணபத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். வேறு வருமான தலைப்பிற்கு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் மத்திய அரசாங்கத்திற்குரிய மஞ்சள் நிற பற்றுச்சீட்டை ஒட்டி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது. அத்துடன் பரீட்சைக் கட்டணமாக முத்திரை மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

IV. விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரச / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

V. இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் “செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி” என்ற முகவரிக்கு 2025.07.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் “மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவைப் பிரிவின் விவசாய போதனாசிரியர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் –2025” எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது. விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சைத் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொருத்தமானதாக அமைவதுடன், விண்ணப்பத்தினை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

VI. தபாலில் தொலைந்த மற்றும் தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான புகார்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

VII. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது

VIII. பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமை தகவுத் திறமையை ஏற்றுக் கொண்டதென அமையாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது, அறிவித்தலுக்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என அறியப்படும் சந்தர்ப்பத்தில், அவரது பரீட்சார்த்தியுரிமை இரத்து செய்யப்படும்.

IX. பரீட்சை நிலையம் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைமூலம் அறியத் தரப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அனுமதி அட்டையானது பரீட்சை நடைபெறுவதற்கு14 நாட்களுக்கு முன்னதாக விண்ணபதாரர் விண்ணபத்தில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது விண்ணபத்தில் குறிப்பிட்டுள்ள கையடக்க தொலைபேசிக்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

X. அறிவிப்பு வெளியாகி 04 அல்லது 05 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் காரியாலயத்திற்கு அறிவித்தல் வேண்டும். (தொலைபேசி இல. 081 – 2213097)

11. உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, விண்ணப்பப் படிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து, உரிய தேதிக்கு முன்னதாக அனுப்பிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளிடம் தமது கையொப்பங்களை சான்றுப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

12.பரீட்சார்த்திகள் தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் மாத்திரம் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சையினை நடாத்தல் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறும் பட்சத்தில், மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் நேரிடும்.

13. **ஆள் அடையாளம் :** - இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

* ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள்அடையாள அட்டை
* செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
* அத்துடன், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். மேலும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
* மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளால் விண்ணப்பதாரியை அடையாளம் காணக் கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

**14. பொய்யான தகவல்களுக்கான தண்டனை**

14.1 இப்பரீட்சைக்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம்.

14.2 பரீட்சார்த்தியொருவர் வேண்டுமென்றே பிழையான தகவலை சமர்ப்பித்துள்ளாரென அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்துள்ளாரென பின்னர் தெரியவருகையில், அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கனவனத்திற் கொள்ளப்படமாட்டாது, அத்துடன் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படலாம் அல்லது அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

15. விண்ணப்பதாரர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும்

16. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள/ குறிப்பிடாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம், இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குறியதாகும். மேலும், இந்த அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்து தெளிவுபடுத்துவது / முடிவெடுப்பது மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

17. இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

சுஜானி ஆர் விஜேதுங்க,
செயலாளர் (பதில்),
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2025, யூலை 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் விவசாய போதனாசிரியர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2025**

பரீட்சை இலக்கம் : [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ] (சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E)
(உரிய குறியீட்டினை கூட்டினுள் எழுதுக)
(மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

01.
1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ....................................................................................
Mr./Mrs./Miss (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (உதா:- SILVA A.B.C.D.) ....................................................

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :-....................................................................................
திரு./திருமதி/செல்வி (சிங்களத்தில்/தமிழில்) ....................................................................................

1.3 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................................
....................................................................................................

1.4 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) : ....................................................
....................................................................................................

02.
2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ....................................................................................
....................................................................................................

2.2 மின்னஞ்சல் முகவரி : ....................................................................................

2.3 தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

2.4 பால் : (ஆண் - 0 , பெண் - 1 ) [ ]

2.5 சமூக நிலை : திருமணமாகாதவர் - 1, திருமணமானவர் - 2 [ ] (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

03.
3.1 பிறந்த திகதி : | Y | | | | M | | D | |

3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2025.07.31) வயது :

வருடங்கள் : ………………….. மாதங்கள் …………… நாட்கள் ……..…

3.3 தொலைபேசி இலக்கம் (பரீட்சை தொடர்பில் அறிவிப்பதற்காக) :

| கையடக்கம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

| நிரந்தரம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

04. விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம் : …………………..……..……..

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

05. வாழ்க்கைத் துணையின் நிரந்தர வதிவிட மாவட்டம் (விண்ணப்பதாரர் இம்மாகாணத்தில் 03 வருடங்களுக்குக் கூடிய நிரந்தர வதிவினைக் கொண்ட வாழ்க்கைத் துணையினைக் கொண்டிருப்பின்) : …………………..……..……..

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

06. கல்வித் தகைமைகள் :

6.1 க.பொ.த (சா. த.) பரீட்சை விபரங்கள் :
பரீட்சை ஆண்டு :
சுட்டிலக்கம் :

| | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

6.2 க.பொ.த (உ. த.) பரீட்சை விபரங்கள் :
பரீட்சை ஆண்டு :
சுட்டிலக்கம் :

| | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

07. தொழில்சார் (தொழில்நுட்ப) தகைமைகள் : (தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

| *நிறுவனம்* | *பூர்த்தி செய்துள்ள கற்கை நெறிகள்* | *கற்கைநெறி கால எல்லை* | *NVQ மட்டம்* | *NVQ சான்றிதழ் இலக்கம்* | *சான்றிதழ் இலக்கமும் செல்லுபடியாகும் திகதியும்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

08. ஏனைய தகைமைகள் : ..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

09. நீங்கள் யாதேனும் உடல் உபாதையுடையவரா? : ..........................................................................................
ஆம் எனில் அது தொடர்பாக விபரம் ..........................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

10. பரீட்சைக் கட்டணம் ரூபா 600/- செலுத்துதல் தொடர்பான விபரம் : .......................................................................
- i. பணம் செலுத்திய பிரதேச செயலகம் : ....................................................................
- ii. திகதி : ....................................................................
- iii. பற்றுச்சீட்டின் இலக்கம் : ....................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையலாம்.) |

11. நீங்கள் யாதேனும் குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? .............................................................
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும். ..............................................................................

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும் நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் இப்பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் தொடர்பாக மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

..............................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்

....................................
திகதி

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணபத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ..............................................................................என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் ............................................... ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………

அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.

(உத்தியோக முத்திரை)

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ……………………………
பதவி : ……………………………………………
முகவரி : ……………………………………………
திகதி : ……………………………………

07 - 677